## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| | குறித்த நியமத்துடன் தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 மற்றும் 20 இன் 103 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை யல்லாத சொத்துக்கள் மற்றும் கற்பனை சொத்துக்களுக்கான எளிய பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 1,405,884,194 ஆன நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அது தயாரிக்கப்பட்ட பின்னர் இக்குறைபாடுகள் அனைத்தையும் அகற்றுவதற்கு இயலுமை உள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் இறுதியிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட வாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் உலக வங்கி செயற்திட்டத்திற்காக (AHEAD) முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்த ரூபா 97,480,511 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 03 இன் பிரகாரம் பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த மையால் ஆண்டின் மிகை அப் பெறுமதியால் அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளின் செலவினம் மற்றும் நடைமுறை வேலைக் கணக்கின் மீதியுடன் கணக்கீடு செய்தமை காரணமாக 2022 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்தை மிகைத்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைமுறி உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 4,440,449 தொகை பிணை முறி மீறல் நிதியத்திற்கு மாற்றப்படாமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்நிதியத்தின் மீதி மற்றும் மீண்டெழும் திரண்ட நிதியத்தின் பற்றாக்குறை அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு கணக்கீட்டு தவறு காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 25,487,787 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டதால் ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள், பொறிகள் | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு சரியாக கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி னத்தையும் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2022 ஜுலை மாதத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடங்களுக்காக ஒப்பந்தக காரர்களுக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 1,255,557 தொகை கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி மற்றும் மூலதன கடன்கொடுத்தோர் மீதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த கொடுப்பனவு நிதிப் பிரிவிற்கு 2023 ஏப்ரல் மாதத்தின் போதே கிடைத்துள்ளது. | ஆண்டிற்குரிய செலவினம் சரியாக கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டில் லொக்கர் களையும் கட்டில்களையும் திருத்துவதற்காக செலவிடப் பட்டிருந்த ரூபா 5,628,910 ஆன மீண்டெழும் தன்மையிலான செலவினம் மூலதனமாக்கப்பட்ட மையால் வருடாந்த மிகை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி முறையே குறைத்தும் அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த திருத்த வேலைகள் மூலம் சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் அதிகரிப்பதாக தர அறிக்கை வழங்கப்பட்டிருந்தமையால் இலங்கை பொது கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் மூலதனமாக்கப்பட்டது. | பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது. மீண்டெழும் மற்றும் மூலதனத் தன்மையிலான செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | விவசாய விஞ்ஞான பீடத்தின் கட்டிட நிர்மாணிப்பிற்கு வழங்கப்பட்டிருந்த வேலை ஆரம்பிப்பு முற்பணங்களில் கழிப்பனவுகளை கணக்கீடு செய்யம் போது வெட் இல்லாமல் பதிவ செய்யப்பட்டமையால் ரூபா 6,020,086 ஆல் பூர்த்தியடையாத வேலைகள் குறைத்தும் தீர்வு செய்யப்படாத முற்பண மீதி அதிகரித்தும் நிதிக்கூற்றுக்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. | VAT இல்லாமல் முற்பணம் வழங்கப்பட்ட போதும் மூலதனப் பிரிவினால் கொடுப்பனவு உறுதி சீட்டு தயாரித்து அனுப்பும் போது VAT இல்லாமல் கழிப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கணக்கீடு செய்யும் போது அவ்வாறு செய்யப்பட்டது. | இத்தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | மருத்துவ பீடத்தின் பரா சிகிச்சை கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 28,265,340 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகை கணக்கீடு செய்யாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் அம்முற்பணக் கணக்கின் மீதி மற்றும் மூலதன மானியம் அப்பெறுமானத்தால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தது | அடுத்த கணக்காண்டின் போது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாணவர் | இத்தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை | இத்தவறுகளை சீராக்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உதவிப்பணம் ரூபாய் 44,852,000 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்ட போதும் அது ரூபா 38,180,000 என கணக்கீடு செய்யப்பட்டு இருந்தமையால் ஆண்டின் மாணவர் உதவிப் பண மானிய வருமானம் மற்றும் பெறவேண்டிய மாணவர் உதவிப்பண மீதி ரூபா 6,672,000 குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது | எடுப்பதாக. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 170,642,885 கூட்டுத் தொகையான பிணைமுறிகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | அறவிடப்பட வேண்டிய பிணை முறிகளின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | பிரயோக விஞ்ஞான பீடத்தில் காணப்பட்ட இருப்பின் பெறுமதியை கணக்கீடு செய்யும் போது அலகு கிரயத்தை சரியாக இனங்காணப்படாத காரணத்தினால் 10 இரசாயன பொருள் உருப்படிகளின் தேறிய பெறுமதி ரூபா 5,232,260 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. அதனால் எஞ்சிய இருப்பு மீதி மற்றும் ஆண்டின் மிகை மற்றும் அப்பெறுமானத்தால் கூடுதலாக நிதிக்கூற்றுக்கள் காண்பிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறே இருப்பு பதிவேடு மற்றும் பின் அட்டைகள் சரியாக பராமரிக்கப்படாமையால் கிரயம் இனங்கான முடியாத 106 இருப்பு உருப்படிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இருப்பு பௌதீக மெய்மையாய்வின் போது பின் அட்டைகளில் தவறுகள் உள்ளதாகவும் இனங்காணப்பட்ட இரசாயன பொருட்களின் விலையை திட்டவட்டமாக குறிப்பிடும் மூலம் சமர்ப்பிக்கப்படாமையால் (Invoice/GRN) அறிக்கையிடாமையால் உள்ளவரான இருப்பின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் எடுக்கப்படவில்லை என்பதாக | பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது இத்தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | ERASMUS செயற்திட்டத்தின் மானியங்கள் மூலம் பிரயோக விஞ்ஞான பீடத்திற்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,683,360 ஆன சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி மற்றும் மூலதன மானியம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க பட்டிருந்தன | இச்சொத்துக்கள் செயற் திட்டத்தின் கால முடிவின் போது மூலதனமாக்கப் பட்டிருந்தமை மற்றும் அடுத்த ஆண்டுகளில் இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பு மூலம் காண்பிப்பதாக. | மூலதன மானியங்கள் மூலம் கொள்வது செய்யப்படுகின்ற சொத்துகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | முன்னைய இரண்டு ஆண்டுகளுக்காக ரூபா 468,000 ஆன கணக்காய்வு கட்டணங்கள் மிகை ஒதுக்கீடு செய்தமைக்காக | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டுக்குரிய கணக்காய்வு கட்டணங்களுக்கான நிதி ஏற்பாடு மேற் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | | கொள்ளப்பட வேண்டியதுடன் முன்னைய ஆண்டுகளுக்குரிய மிகை/குறை ஒதுக்கீடுகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | முன்னைய ஆண்டுகளில் ஆதனக் கடன்களின் வட்டி வீதம் குறைவடைந்தமையால் வங்கியில் இருந்து மீளச் செலுத்திய ரூபா 1,412,765 தொகையை முன்னைய ஆண்டின் இலாபத்துக்கு சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காண்டின் இறுதியில் பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,274,461 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மிகை ரூபா 2,687,226 மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,274,461 கூடுதலாகவும் மீண்டெழும் திரண்ட நிதியம் ரூபா 1,412,765 குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தது | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஃ) | அட்டுறு செலவினம் ரூபா 3,568,546 தொகை கூடுதலாக கணக்கிட்டு செய்யப்பட்டமை மற்றும் முன்னைய ஆண்டுக்குரிய செலவினம் ரூபா 1,104,343 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 4,672,889 குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்ததுடன் மீண்டெழும் திரண்ட நிதியம் ரூபா 1,104,343 ஆலும் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 3,568,546 ஆலும் நிதிக் கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க்) | 2023 ஆம் ஆண்டிற்குரியதான மற்றும் அவ்வாண்டிலேயே செலுத்தப்பட்ட செலவினம் ஒன்று 2022 ஆம் ஆண்டின் முற்கொடுப்பனவு கணக்கிற்கும் அட்டுறு செலவின கணக்கிற்கும் ரூபா 1,105,231 வீதம் முறையே வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டு இருந்தது. இதனால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புகள் அப் | 2023 இல் குறித்த கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து கழிக்கப்படும் வகையில் பணம் கொடுப்பனவு செய்யப் பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தால் கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தன. | | |
| (கா) | முன்னைய ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய மூலதனச் செலவினம் ரூபா 8,510,176 தொகையை முறையான அங்கீகாரம் ஒன்று இல்லாமல் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பதிவழிக்கப்பட்ட சொத்துக்கள் என்னவென்பது தொடர்பாக விரிவாக இனங்காணப் பட்டிருக்கவில்லை. மேலும் அச்சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு ரூபா 7,852,560 தொகை உரிய சொத்துக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 657,616 ஆலும் செலுத்த வேண்டிய மூலதனச் செலவினம் ரூபா 8,510,176 ஆலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டு இருந்ததுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டு கணக்கு மீதி ரூபா 7,852,560 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தது. | நீண்டகாலமாக அட்டுறுவாக காணப்பட்ட மூலதனச் சொத்துக்களுக்கான மீதிகளுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டு கணக்காண்டின் இறுதி வரையில் நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப் படாமையால் அட்டுறு ஆவணங்களை வழங்கிய பிரிவுகளிலிருந்து மீதிகளை உறுதிப்படுத்தி கடிதங்களைப் பெற்றுக்கொண்டு அட்டுறுவாக்கப்பட்டு காணப்பட்ட மூலதனச் சொத்துக்கள் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வருமானத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யும் தவறு அடுத்த கணக்காண்டில் சீராக்கம் செய்வதாகவும். | பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது. குறித்த சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்காமல் இருந்ததை உறுதிப்படுத்தாமலும் முறையான அங்கீகாரமின்றி சொத்துக்கள் பதிவழித்தல் மேற்கொள்ளப்படக் கூடாது. |

### 1.5.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முதல் மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,201,150 தொகை மற்றும் 2018 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,380,750 தொகை மீளாய்வாண்டில் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) | 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 34 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த நானாவித முற்பணம் ரூபா 7,475,251 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாய்மொழி மற்றும் எழுத்துமூலம் முற்பணம் பெற்றுக்கொண்ட தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்த போதும் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) | செயல்நிமித்த கட்டுநிதி வழங்கக்கூடிய ரூபா 100,000 ஆன ஆகக்கூடிய எல்லையை மிகைத்து 15 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,470 முதல் ரூபா 552,330 இற்கு இடையிலான வீச்சில் செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் 15 சந்தர்ப்பங்களில் ரூபா 646,456 ஆன முற்பணம் பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | அநேக பிரிவுகளில் பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களின் சேவையில் இல்லாத சந்தர்ப்பங்கள் இருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தின் கீழ் நிரந்தர பதவியணியினருக்கு மாத்திரம் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் | நிலையான சொத்துக்கள் | நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குரிய ரூபா 35,773,655 ஆன நிறுத்தி வைத்தல் தொகை தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | கொள்வனவின் பொது நிறுத்தி வைக்கப்பட்ட தொகையாக இருப்பதால் அதனை மீண்டும் கொடுப்பனவு செய்ய நேர்வதாக | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி | உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டில் ரூபா 218,807,919 தொகை 17 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யட்ட தொகை பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான மிகை நிதியொன்றாக இல்லாமல் இருந்ததுடன் இந் நிதி பல்கலைக்கழகத்தின் நிதிக்குழு மற்றும் ஆளுகை சபையின் அங்கீகாரத்துடன் தற்காலிக அடிப்படையில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதிச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங் களுக்கான தாபன விதிக் கோவை V ஆம் அத்தியாயத்தின் 7 பந்தி | 2000 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 25 உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை முறி மீறல் காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 140,721,766 தொகை 2023 மே மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2023 மே 12 ஆந் திகதி வரை ரூபா 29,921,119 தொகை அறவிடப்பட்டுள்ளதாக | உயர் கல்வி நிறுவனங்களுக்க ான தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரசு செலவின முகாமைத்துவம் தொடர்பாக திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட 2022 ஆகஸ்ட் 8 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் | உள்நாட்டு நிதியங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு சுற்றுலா அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிரு ந்த போதும் அதற்கு | பிணை முறி மீறிய ஊழியர்களால் செலுத்தப்படுகின்ற பணத்தின் மூலம் இதற்காக நிதி ஏற்பாடு வழங்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் | திறைசேரி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2.9 ஆம் பந்தி | முரணாக பேராசிரியர் ஏழு ஆண்டு விடுமுறை அடிப்படையில் வெளிநாடு செல்வதற்காக விமான பயணச்சீட்டினைக் கொள்வனவு செய்வதற்காக 2022 திசெம்பர் 14 ஆம் திகதி ரூபா 1,057,600 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ளதாக | |
| (உ) | 2016 மார்ச் 01 ஆம் திகதிய 4/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | சுயநிதியிடல் செயற்பாடுகள் (Self-Financing Activities) செலவினங்களை மேவுகை செய்யும் அடிப்படையிலும் (Cost Recovery) இலாபத்தை உழைப்பதை நோக்கமாக கொள்ளாத (Non Profited Basis) அடிப்படையிலும் செயற்பட வேண்டிய போதிலும் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான 02 செயற்பாடுகள் மூலம் ரூபா 74,908,394 ஆன தேறிய மிகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது | சுய நிதியிடல் செயற்பாடுகளில் இருந்து கிடைத்த மிகை அச் சுற்றிக்கையின் பிரகாரம் Cost Recovery மற்றும் Non Profited அடிப்படையில் கொண்டு செல்வதற்கு தேறிய உழைப்பு அபிவிருத்தி செலவினத் தலைப்பிற்கு மாற்றுவதற்கு நேர்ந்ததாக. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் இணைந்த செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அவ்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் 2023 | குறித்த வழிகாட்டல்களுக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மார்ச் 20 ஆந் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்தது. | |

## 2. நிதி மீளாய்வு

### நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 381,445,894 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 825,532,686 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 444,086,792 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மூலதன மானியங்கள் ரூபா 189,137,306 ஆல் குறைவடைந்தமை, செயற்பாட்டுச் செலவினம் ரூபா 324,962,891 ஆலும் செயற்பாடல்லாத செலவினம் ரூபா 105,110,110 ஆல் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்காக மென்பொருள் ஒன்றை தயாரித்தல் மற்றும் மென்பொருளுக்கு தகவல்களை உள்ளடக்குவதற்காக 08 சந்தர்ப்பங்களின் போது மொத்தம் 1,370,300 கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்த போதும் 2023 மே மாதம் வரை நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கும் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரிப்பதற்காக அனைத்து பீடங்களையும் மேவுகை செய்யும் வகையில் ஏழு உறுப்பினர்களுடன் கூடிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அதன் நடவடிக்கைகள் 80 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரிப்பது துரிதமாக படவேண்டும் |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 335 கல்வி மற்றும் கல்வி சாரா கல்வி சாரா பதவியணியின் உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி மானியங்கள் ஆக மொத்தம் ரூபா 433,826,884 தொகை செய்யப்பட்டு இருந்த போதும் மீளாயவாண்டின் இறுதி வரை எந்தவொரு உத்தியோகத்தரும் ஆராய்ச்சி அறிக்கையை சமர்ப்பித்து இருக்கவில்லை | தற்போது பிரசித்தப் படுத்தப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளுக்காக மீண்டும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை எனவும் (விரிவுரையாளரின் அதிக அளவானோர் இதன் கீழ் எடுக்கப்படுவர்) அவ்வாறு செய்யப்படும் ஆராய்ச்சி களுக்காக ஆராய்ச்சி மானிய குழுவின் பரிந்துரை அடிப்படையில் படிகள் வழங்கப்படுவதாகவும் புதிய ஆராய்ச்சி முன்மொழிவு களுக்காக முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரசித்தபடுத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் அடுத்த 03 ஆண்டுகளுக்காக மாற்றும் படிகளைச் செலுத்த முடியும். ஆதலால் ஆராய்ச்சி அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களிட மிருந்தும் அந்த அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கல்விசார் பதவியணிக்குரிய 41 உத்தியோகத்தர்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 66,258,551 ஆன ஆராய்ச்சி மானியம் வழங்கப்பட்டிருந்த போதும் அந்த ஆராய்ச்சி செயற்திட்ட மூலம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கிடைத்த பங்களிப்பு தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அத்தகவல்களை வழங்காமல் இருப்பதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது. | கணக்காய்வினால் கோரப்படும் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 123,052,693 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த பல்கலைக் கழகத்தின் விளையாட்டரங்கு மற்றும் பார்வையாளர் மண்டபத்தில் காணப்பட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததாக பொது பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 5,156,160 ஆன நிறுத்தி வைத்தல் தொகையை பயன்படுத்தி விளையாட்டரங்கினை அமைப்பதற்கு 2023 மே மாதம் வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நிறுத்தி வைத்த தொகையை பயன்படுத்தி விளையாட்டரங்கு அமைப்பதற்கு நேர்வதாக 2022 திசெம்பர் 29 ஆம் திகதி பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு (CECB) அறிவித்திருந்தது எனினும் அத் தீர்மானத்துக்கு அவர்கள் இணங்காததால் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நேர்வதாக அறிவித்துள்ளதாக. | பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பல்கலைக்கழக சுத்திகரிப்பு மற்றும் பூங்கா பராமரிப்புக்காக 2021 டிசம்பர் மாதத்தின் போது ரூபா 61,440,000 உடன்படிக்கை செய்யப்பட்டது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் சுத்திகரிப்பு ஊழியர்கள் கைவிரல்அடையாளத்தின் மூலம் தமது வருகை மற்றும் வெளியேறலை பதிவு செய்ய வேண்டிய போதிலும் அனைத்து ஊழியர்களும் அதற்கு இணங்க செயற்படவில்லை. அவ்வாறு 2022 ஜனவரி முதல் செப்டம்பர் வரையான காலப்பகுதியில் சுத்திகரிப்பு பிரிவிற்கு எந்தவொரு சேவையும் வழங்காத இரண்டு பேருக்காக ரூபா 354,016 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுத்திகரிப்பு சேவை நிறுவனத்திற்கு 2022 ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை கொடுப்பனவு செய்யும் போது பிரிவு தலைவர் களினதும் கைவிரலடையால பதிவு அறிக்கை ஆகிய இரண்டில் குறைவான எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள பெறுமதிக்கு கொடுப்பனவு செய்வதாகவும் சிற்றுண்டிச்சாலையில் சுத்திகரிப்பு பிரிவில் எவரேனும் ஒருவர் சேவை புரிந்தால் அது தொடர்பாக சுத்திகரிப்பு நிறுவனத்தினாலேயே மேற்பார்வை செய்யப்பட வேண்டும். குறித்த தரப்பினருக்கு தெரியப்படுத்தி எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஊழியர் வருகையை சரியாக உறுதிப் படுத்தப்படுவதற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மாணவர்களின் நடமாட்டத்திற்கான ஐரோப்பிய | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 489,086 | கூடுதலாக கொடுப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | சமூக செயல் முன்மொழிவு முறைமையின் (European Community Action Scheme for the Mobility of University Students / ERASMUS) செயற்திட்ட நிதி மூலம் வெளிநாட்டு நிகழ்ச்சிகளுக்காக பங்குபற்றிய 08 உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவினம் மற்றும் இணைந்த படிகள் கொடுப்பவரின் போது தவறுதலாக ரூபா 1,760,745 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தொகையை 2022 ஜுலை 01 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய பணத்தை கொடுப்பனவு செய்யும் போது குறித்த நபர்களிடமிருந்து தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இணைந்த படிகள் இச் செயற் திட்டதிற்குரிய நாளாந்த செலவினங்களுக்காக வழங்கப்படுகின்ற தொகையாக இருப்பதால் அதனை மீண்டும் தீர்வு செய்யத் தேவையில்லை என்பதாக | செய்த தொகையை மீள அறவிட வேண்டியதுடன் முற்பண பதிவேட்டின் பிரகாரம் முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்ட இணைந்த படிகளைத் தீர்வு செய்தல் வேண்டும். |
| (இ) | 2022 சனவரி மாதத்தின் போது வெளிநாட்டு மாணவர் ஒருவர் தனது நடவடிக்கைகளை விட்டுச் சென்ற காரணத்தினால் அவருக்காக கிடைத்த வெளிநாட்டு புலமைப் பரிசில் நிதியத்தில் (Foreign Student Scholarship) எஞ்சிய ரூபா 3,544,756 தொகையை நிதியத்துக்கு அனுப்புவதற்கு அல்லது அரச வருமானத்துக்கு எடுப்பதற்கு 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | இம்மாணவர் இடைநடுவில் பல்கலைக்கழகத்தை விட்டு சென்றுள்ளதால் உயர் கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி பணத்தை மீள அனுப்புவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்ரகை எடுப்பதாக. | எஞ்சிய பணத்தை குறித்த நிறுவனத்திற்கு மீள அனுப்புவதற்கு அல்லது அரசின் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இம்புள்பே பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் வீதி அபிவிருத்தி சபையால் செயற்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்ட ஒப்பந்தகாரர் ஒருவருக்கு பல்கலைக்கழ வளவில் இருந்து 500 கியுப் மண்ணை இலவசமாக வெட்டிக் கொள்வதற்கு ஆளுகை சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது மண்ணை எடுத்துச் சென்றதாக பாதுகாப்பு ஊழியர்களால் வருகை சம்பவக் குறிப்பொன்ற இடப்பட்டிருந்த போதும் வருகை தந்த லொறி வண்டி மற்றும் எடுத்துச் சென்ற மண் அளவின் தகவல் தொடர்பாக எவ்வித | இங்கு பாதுகாப்பு பிரிவினால் எடுக்கப்பட்டுள்ள செயற்பாட்டினை ஏற்றுக் கொள்ள முடியாததுடன் ஆதலால் பாதுகாப்பு சேவையை வழங்கும் கம்பனிக்கு அறிவித்து இவ்வாறான நடவடிக்கைகளை சரி செய்வதற்கும் எதிர் காலத்தில் பாதுகாப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளும் போது இவ்வாறான நியதிகள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | பல்கலைக்கழகத்திற் குரியதல்லாத செயற்பாடுகளுக்காக ஆளுகை சபை அங்கீகாரம் வழங்க கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | தகவலும் அதில் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஆ) | 10 செயற்திட்டங்களுக்குரிய நிறுவனங்களிலிருந்து கிடைத்த ரூபா 745,813 தொகை பல்கலைக்கழக பதவியணினருக்கு படிகளாக செலுத்தப்பட்டு இருந்த போதும் அதற்காக முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | பூர்த்தி செய்ப்பட்ட செயற்திட்டங்களில் எஞ்சியிருந்த பணத்தை படிகளாக பதவியணியினருக்கு . கொடுப்பனவு இதற்கு முன்னர் பெற்றுக்கொண்ட (2015 ஆம் ஆண்டளவில்) அங்கீகாரத்துக்கு இணங்க இடம்பெற்ற போதும் குறித்த அங்கீகாரத்தை தற்போது தேடிக் கொள்ள முடியாதுள்ளது. குறித்த அங்கீகாரத்தை மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான அங்கீகாரம் கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (இ) | திறந்த மற்றும் தொலைக்கல்வி கேந்திரத்தின் மூலம் பதவியணி உறுப்பினர்களுக்காக பெலிகுல் ஓய பிரதேசத்தில் ஹொட்டல் ஒன்றில் நடத்தப்பட்டிருந்த இரவு விருந்திற்காக (Networking Night) ரூபா 460,000 தொகை செலவிடப்பட்டு இருந்தது. | திறந்த மற்றும் தொலைக்கல்வி பிரிவு (CODL) மூலம் ஒவ்வொரு ஆண்டும் பட்டப்படிப்பு மற்றும் சான்றிதழ் பத்திரங்கள் வழங்கல் விழாவின் பின்னர் திறந்த மற்றும் தொலைகல்வி பிரிவின் பதவியணியினரின் அர்ப்பணிப்பை மதிப்பிடுவதற்காக உப வேந்தர், பீடாதிபதிகள் கல்வி மற்றும் நிர்வாகப் பதவியணியினர் பங்கு பற்றலுடன் உரிய அங்கீகாரத்துக்கு உட்பட்டு இந்த (Networking Night) நடாத்தப்பட்டதாக. | அரசின் நிதிகளை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்றுக்கு முன்னைய 6 ஆண்டுகளுக்காக ஆடம்பர வரி கொடுப்பனவு செய்யாமை காரணமாக வரித் தொகைக்கு மேலதிகமாக ரூபா 177,500 தொகை தண்டப்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறானவை இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இடம்பெற்றுள்ள நட்டம் தொடர்பாக பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.5 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ பீடத்திற்காக Optical Mark Reader இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு உரிய காலத்தில் கேள்வி மதிப்பீடு நடவடிக்கைகள் செய்து கேள்வி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ஏற்பட்ட விலகல் காரணமாக ரூபா 1,270,585 ஆன நட்டம் ஒன்று பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டு இருந்தது | முதலாம் ஆண்டு முதல் இறுதி ஆண்டு வரையான மருத்துவ பீடத்தில் அனைத்து பரீட்சைகளுக்கும் இந்த இயந்திரம் அத்தியாவசியமாகும். நாட்டில் அவ்வப்போது காணப்பட்ட நிலைமை அடிப்படையில் அநேகமான கம்பனிகள் OMR இயந்திரத்தை வழங்க முடியாது என குறிப்பிடப்பட்டு இருந்த போதும் வைத்திய பீடத்திள் வேண்டுகோளின் பேரில் கேள்வி கோரி இந்த உருப்படியை பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | உரிய காலத்தில் கேள்வி மதிப்பீடு நடவடிக்கைகள் செய்யப்பட்டு அரசுக்கு பொருளாதார நன்மைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தி செயற்திட்டம் (STHRD) இன் கீழ் 2021 ஆம் ஆண்டில் ரூபா 25,871,615 இற்கு 839 வெவ்வேறு புத்தக அலகுகளைக் கொள்வனவு செய்வதற்காக அரசின் கேள்வி மதிப்பீட்டு வழிகாட்டல் கோவையின் 7.10 வழிகாட்டலுக்கு புறம்பாக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் புத்தகங்கள், தவணை சஞ்சிகைகள் வழங்குதல் தொடர்பான முன் அனுபவம் இல்லாத நிறுவனம் ஒன்றிலிருந்து ஒட்டுமொத்த பெறுகையில் 74 சதவீதம் அதாவது ரூபா 21,062,900 பெறுமதியான 449 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 97 புத்தகங்களின் விலை தற்போதய சந்தை விலையை மிகவும் உயர்ந்த பெறுமதியை எடுத்த காரணத்தினால் ரூபா 5,611,926 ஆன நிதிசார் நட்டமொன்று இடம்பெற்று பெற்றிருந்ததுடன் ரூபா 4,516,000 பெறுமதியான 61 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்ட (used books) புத்தகங்கள் என கண்டறியப்பட்டது. அப் புத்தகங்களில் ரூபா 2,499,400 வகையான 14 புத்தகங்கள் கொள்வனவு செய்யும் தேவைப்பாடு தெளிவற்றதாக இருந்தது. அவ்வாறே | மூன்று பேருடனான குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக | பரிசோதனைகளைத் துரிதப்படுத்தி பொறுப்பான தரப்பினர்கள் உறுதிப்படுத்தப்பட்டு அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

கொள்வனவின் போது காணப்பட்ட வெவ்வேறு பலவீனங்கள் மற்றும் இணைய தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்க கூடிய துண்டுப் பிரசுரங்களுக்காக கொடுப்பனவு செய்தமை காரணமாக ரூபா 565,650 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீட கட்டிடத் தொகுதியில் நிர்மாண செயற் திட்டத்தின் இரண்டாம் கட்டம் - I ஆம் பகுதி ரூபா 452,409,980 ஆன (VAT உடன்) - ஒப்பந்த பெறுமதிக்கு 2018 நவம்பர் 18 ஆம் திகதி நிர்மாண கம்பனி ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் Design & built (Turnkey) ஒப்பந்தமொன்றாக இருப்பதால் அங்கீகரிக்கப்பட்ட கிரயங்கள் மற்றும் திட்டங்கள் திருத்தப்படாமல் இருக்க வேண்டிய போதிலும் மேலதிக நிதிஏற்பாடு மேற்கொள்ளாமல் ரூபா 24,625,295 ஆன மேலதிக வேலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வரிக்காக ஒதுக்கிய நிதிஏற்பாட்டை வேறு கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்த முடியாமல் இருக்கையில் பெறுமதி சேர் வரி 15 சதவீதத்தில் இருந்து 8 சதவீதம் வரை குறைவடைந்தமையால் வரி சேமிப்பினை பயன்படுத்தி மேலதிக வேலைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இறுதிப் பட்டியலில் Solar Energy System இற்காக ரூபா 3,000,000 கொடுப்பனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அதன் வேலை விடயங்கள் போதியளவில் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத்தோடு 02 மேலதிக வேலை மதிப்பீட்டிற்குரிய ரூபா 6,579,931 மற்றும் ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட solar street lighting system இற்காக ரூபா 3,600,000 கொடுப்பனவு செய்திருந்த போதும் அதற்குரிய ஆரம்ப திட்டம் மற்றும் முன்மொழிவுகள் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. மேலும் மேலதிக வேலைகளுக்காக ரூபா 328,269 தொகை கூடுதலாகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்நிர்மாண திட்டத்திற்கான ஆரம்ப திட்டம் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்தது. அது வரை பீடத்தில் 05 கல்வித்துறைகளில் இருந்த மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 980 ஆக இருந்தனர். தற்போது இப்பீடத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 1487 ஆக காணப்படுவதுடன் தற்போது வருடாந்தம் அனுமதிக்கும் மாணவர் எண்ணிக்கை 833 வரை அதிகரித்துள்ளது. இவ்வாறு அதிகரிக்கும் மாணவ சமூகத்திற்கு தேவையான வசதிகளை வழங்கும் அடிப்படை நோக்கமாக விலகல் / திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப ஆதனங்களைத் தயாரிக்கும் போது பீடத்தின் பதவியணி பிரதிநிதிகளின் பங்களிப்பு மற்றும் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக. | வடிமைப்பு நிர்மாண (Design & Built) ஒப்பந்தங்களில் அங்கீகரிக்கப்பட்ட கிரயம் மற்றும் திட்டங்கள் என்பன திருத்தம் செய்யக்கூடாது. அத்தோடு பல்கலைக்கழகத்தின் பீடக் கட்டிடமொன்று நிர்மாணிக்கும் போது எதிர்வரும் ஆண்டுகளில் எழக்கூடிய வேறுபாடுகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |